

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | செப்டம்பர் 22, 2022 | புரட்சி 21 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00

# ஓராண்டு பணி முடித்த அர்ச்சகர்களுக்கு பெரியார் பிறந்த நாள் விழாவில் பாராட்டு

*அர்ச்சகர் பயிற்சியின் போதும் பணி நியமனத்துக்குப் பிறகும் பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் அவமதிப்புக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாவதை அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் வா. ரங்கநாதன் விவரித்தபோது கூட்டத்தினர் உணர்வு மயமாயினர். சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பெரியார் பிறந்த நாளான செப். 17 அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் பார்ப்பனரல்லாத அனைத்து 'இந்து' அர்ச்சகர்களுக்கான பாராட்டு விழாவில் பங்கேற்று வா. ரங்கநாதன் நிகழ்த்திய உரை.*

பார்ப்பன அர்ச்சகர்கள், பாஜக, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களால் கோவில் கருவறையைத் தொட்டு வழிபடுவது மறுக்கப்பட்டு வருகிறது. 2000 ஆண்டு கருவறை இருள் அகற்றுவது என்றாலே வழக்கு ; ஆனால் 2000 ஆண்டு இருள் கடந்த ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாள், முத்தமிழறிஞர் கலைஞரின் மகன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அகற்றப்பட்டது. இது வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய நாள். இது நாம் கொண்டாட வேண்டிய நாள். இது நமக்கு சமூக நீதியில் ஒரு மைல் கல் தான். அதில், 24 அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பணி ஆணை வழங்கி ஓராண்டு நிறைவு பெற்றிருக்கிறது.

கோவிலில் கோபுர தரிசனம் ஒரு ஜாதிக்கு, அர்த்த மண்டபம் ஒரு ஜாதிக்கு, மகா மண்டபம் ஒரு ஜாதிக்கு என்று ஜாதி ஏற்றத்தாழ்வுகள் கோவில்களில் இருந்தது. அப்போது கோவிலில் வழிபடவோ, பார்க்கவோ கூட அனுமதி இல்லை. அப்போது தான், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்று, தந்தை பெரியார் 1969 ஆம் ஆண்டு கருவறை நுழைவு போராட்டத்தை அறிவித்தார். ஏனென்றால், அனைத்து ஜாதியினரும் கடவுளைத் தொட்டு பூஜை செய்ய வேண்டும், தரிசனம் செய்ய வேண்டும் என்பதற்காக. அப்போதைய முதலமைச்சர் கலைஞர், இந்து அறநிலையத்துறைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து "அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர்" சட்டத்தை இயற்றினார். அதன்பிறகு அந்த சட்டத்தை எதிர்த்து பார்ப்பனர்கள் நீதிமன்றம் சென்று அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதை தடுத்தனர். பிறகு 2006ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் ஆட்சி வந்தது. அப்போது அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று அவசர சட்டம் பிறப்பித்தார். அதில் 6 பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டன. திரு வண்ணாமலை, திருச்செந்தூர், பழனி, மதுரை, ஸ்ரீரங்கம், திருவல்லிக்கேணி.




இந்த 6 பாடசாலைகளில் ஒரு பாட சாலைக்கு 40 பேர் என அனைத்து ஜாதியினரும் இட ஒதுக்கீடு அடிப்படையில் பயின்றோம். இதில் அனைத்து மந்திரங்களும், தேவாரம், திருவாசகம் போன்ற மந்திரங்களும் தமிழ் முறைப்படியும் சமஸ்கிருத முறைப்படி ருத்ரம், ஷமக்கம், ஸ்ரீசூக்தம் என்ற வேத மந்திரங்களும் அதே போன்று செய்முறைகளும், ஜோதிடம், கிரந்த எழுத்துக்கள், இவற்றையெல்லாம் படித்து ஆதீனங்கள் மூலமாக தீட்சையும் பெற்றிருக்கிறோம். இத்தனை பயிற்சி களையும் 2008 இல் முடித்து வெளியே வந்தோம். அதன்பிறகு எங்களுக்கு தேர்வு தள்ளி போனது, ஏன் தள்ளிப் போனது என்றால் உச்சநீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது அதனால் தள்ளிப் போகிறது என்றனர். எதற்காக வழக்கு என்றால் தெரிய வில்லை.

அந்த காலகட்டத்தில் தான் அனைத்து அரசியல் கட்சிகளையும் நாங்கள் சந்திக்கிறோம். தங்களை இந்துக்களுக்காக போராடுகிறோம் என்று சொல்லிக் கொள்கிற பாஜக, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி இராம கோபாலன் உள்ளிட்ட இவர்கள் அனைவரையும் 2009 இல் சந்திக்கிறோம்.

அப்போதைய முதல்வர் கலைஞரையும் சந்திக்கிறோம் அப்போது கலைஞர், "ஆகமம் என்கிற தடை இருக்கிறது. அதனால் தான் தங்களுக்கு பணி வழங்க முடியவில்லை. நான் ஆட்சியில் இருந்து இறங்குவதற்கு முன் கண்டிப்பாக உங்களுக்கு பணி வழங்கிவிடுவேன்" என்று உறுதியளித்தார். அதை தற்போது அவரது மகன் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றி விட்டார். (பலத்த கைதட்டல்)

பணிக்காக அனைத்து கட்சிகளையும் சந்தித்துக்கொண்டிருக்கும் போது, சிதம்பரம் நடராசர்கோவிலில் தேவாரம், திருவாசகம் பாடுவதற்கு ஆறுமுக சுவாமி என்பவருக்காக, மக்கள் உரிமைக் கழகம் வழக்கறிஞர் இராஜூ, வாஞ்சிநாதன் போன்றவர்கள் போராடினார்கள். அப்போது உச்சநீதி மன்றம் சென்றார்கள். அப்போது 'தெஹல்கா' என்ற பத்திரிக்கை வழக்கிற்கு முன் எங்களிடம் ஒரு பேட்டியை எடுத்தார்கள். 'தேவாரம்,

(3ஆம் பக்கம்)

## எழுச்சியுடன் நடந்த சனாதன எதிர்ப்புக் கூட்டம்

"சனாதனத்தை வேரறுப்போம்" பொதுக் கூட்டம், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இராயப்பேட்டை இலாயிட்ஸ் சாலை பி.எம்.தர்கா அருகில், 17.09.2022 அன்று மாலை 6 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

முன்னதாக, இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். பெரியார் படிப்பகத்தில் இருந்து பொதுக்கூட்ட மேடை வரை பறை இசை முழங்க ஊர்வலமாக தோழர்கள் சென்றனர்.

தொடர்ந்து, அண்மையில் மறைந்த திமுக பகுதி முன்னாள் அவைத் தலைவர், பகுத்தறிவாளர் க.வே செழியனின் படம் பொதுக் கூட்ட மேடையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியால் திறக்கப்பட்டது. பின், முடிவெய்திய லெனின் சுப்பையா அவர்களின் வழித் தோன்றல்களான புதுவை 'விடுதலைக் குரல்' இசைக் குழுவின் கருத்தாழமிக்க சாதி இந்துத்துவ எதிர்ப்பு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மறைந்த லெனின் சுப்பையா இணையர் நிகழ்வில் பங்கேற்றார். அவருக்கு ஆடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது.

24 அர்ச்சகர்களும் பணி ஏற்று ஒரு ஆண்டு நிறைவடைந்ததையொட்டி, "சனாதனத்தை வேரறுப்போம்" பொதுக்கூட்டத்தில் பாராட்டி பயனாடையும் விருதும் வழங்கப்பட்டது.

பொதுக் கூட்டத்திற்கு இரண்யா தலைமை வகிக்க, தோழர்கள் தேன்மொழி, இரம்யா, யாழினி ஆகியோர் முன்னிலை வகிக்க, கிருத்திகா வரவேற்பு கூறினார்.

தொடர்ந்து, திமுக, செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் இராஜீவ் காந்தி, விடுதலை சிறுத்தைகள் துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட செயலாளர் இரா. உமாபதி நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். இசை இனியாழ் நன்றி கூறினார்.

## கடவுள் மறுப்பாளர்கள் அர்ச்சகர்களோடு கரம் கோர்த்த மேடை

கடவுள் - மதங்களை மறுக்கும் பெரியார் இயக்க மேடையில் பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களுக்கு பாராட்டு விழா நடந்தது. அர்ச்சகர்கள் தங்களுக்கான அர்ச்சர்கள் உடைகளில் பக்தி அடையாளத்துடன் பங்கேற்றனர். அர்ச்சகர் ஒருவர் பக்தி பாசுரம் பாடி விருதை பெற்றபோது கூட்டம் பலத்த கரவொலி எழுப்பியது. கடவுள் இந்து மதத்தின் பெயரால் தமிழர்களை இழிவுபடுத்துவதற்கு எதிரானதே பெரியார் பேசிய கடவுள் - இந்து எதிர்ப்பு என்ற செய்தியை உணர்த்தியது இந்த மேடை. பார்ப்பனரல்லாத வெகு இந்து மக்களைப் புண்படுத்துவது பார்ப்பனர்களும் ஆர்.எஸ்.எஸ்.சும் தான் என்பதையும் பறைசாற்றியது.

மாற்று சிந்தனைகளையும் மதிக்கும் பெரியார் பின்பற்றிய மரபுப்படி பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் இருக்கையில் அமர வைக்கப்பட்டு உரையாற்றிய தலைவர்கள் நின்று கொண்டு படம் எடுத்துக் கொண்டனர். அப்போது ஆகமத் தடைகளைத் தகர்ப்போம்; தமிழர் வழிபாட்டு உரிமைகளை மீட்போம் என்று கழகத் தலைவர் குரல் எழுப்ப, கூட்டத்தினர் வழிமொழிந்து குரல் எழுப்பினர்.

தலையங்கம்

# தென்காசி–தீண்டாமையும் ‘சூத்திர’ இழிவும்

இந்து மதத்தை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா புண்படுத்தி விட்டதாக பா.ஜ.க. பார்ப்பனர்கள் – சங் பரிவாரங்கள் கடும் கண்டனங்களை எழுப்புகிறார்கள். ‘சூத்திரர்’ என்று இந்து மதமான ‘வேதமதம்’ இழிவுபடுத்துவதை ஆ.இராசா சுட்டிக்காட்டிப் பேசியது தான் குற்றமாகிவிட்டது.

சூத்திரர் இழிவை எங்கள் மதம் ஏற்காது என்று அறிவிக்க அவர்கள் தயாராக இல்லை.

தமிழ்நாட்டுக் கிராமங்களில் தீண்டாமை – ஜாதி வெறியர்களால் இப்போதும் ‘மதத்தின் – கடவுளின்’ கொள்கையாகவே சட்டவிரோதமாகப் பின்பற்றப்படுகிறது. தென்காசி அருகே உள்ள பாஞ்சாகுளம் கிராமத்தில் பட்டியல் இனக் குழந்தைகளுக்கு கடைகளில் தின்பண்டம் விற்பதற்குக்கூட தடை செய்து ஊர்க் கட்டுப்பாடு விதித்திருக்கிறார்கள். தீண்டாமை வெறியை மறைப்பதற்குக்கூட தயாராக இல்லை. இறுமாப்புடன் வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர். வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உடனடியாக அய்ந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவின் கீழ் இவர்கள் ஊருக்குள் நுழைய நீதிமன்றம் வழியாகத் தடை விதிக்கும் முயற்சியில் காவல்துறை செயல்படத் தொடங்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்க வேண்டிய நடவடிக்கை. இந்தப் பிரிவு இப்போதுதான் தமிழ்நாட்டில் முதன்முறையாக அமுல்படுத்தப்படுகிறது. இந்த ‘தீண்டாமை’ வெறிக்குக் காரணம் ஊர்க் கோயில் திருவிழாவில் நடந்த ஜாதி மோதல் தான். பட்டியல் இனப் பிரிவினரும் இந்துக்கள்தான் என்று கூறும் பா.ஜ.க., அவர்களை இழிவுபடுத்துவது குறித்து ஏன் போராட முன்வரவில்லை? இந்தத் தீண்டாமையின் ‘மூல வேர்’ வர்ணாஸ்ரமத்தை எதிர்த்துப் பேசுவதே. இந்துக்களைப் புண்படுத்துவதாகி விடுமா?

‘மனுசாஸ்திரம்’ – சூத்திரர்களை பிராமணனின் வைப்பாட்டி மகன் – அடிமை என்று கூறுகிறது. அதைத் தடை செய்ய வேண்டாமா?

‘பகவத் கீதை’ பெண்களைப் பாவ யோனியில் பிறந்தவர்கள் என்று ஒட்டு மொத்தப் பெண்களையும் இழிவுபடுத்துகிறது. வேதங்களை எதிர்ப்பவர்களை பகவான் கிருஷ்ணன், பகவத் கீதையில் வசை பாடுகிறான். துஷ்கருமன் (தீங்கு செய்பவன்); நர ஆத்மா (கீழ் மகன்); ஹத ஞானம் (அறிவு செத்தவன்); அல்ப மேதாவி (அறிவு கெட்டவன்); அவுத்துவன் (அறிவுப் பாதகன்); நஷ்டன் (அழிந்து போனவன்); அசேதனன் (மூளையற்றவன்); சம்சே ஆத்மா (சந்தேகப் பிராணி) – இது கிருஷ்ணன் சூட்டுகிற ‘பட்டம்’. வேதத்தைக் கேள்வி கேட்ட புத்தர்கள், சமணர்கள், சார்வாகர்கள், இப்போதும் கேள்வி கேட்கும் பெரியாரிஸ்டுகள், அம்பேத்கரிஸ்டுகள், மார்க்சிஸ்டுகள் எல்லோருக்கும் இந்த இழிவு பட்டங்கள் பொருந்தக் கூடியது தானே?

அதேபோன்று கடவுள் இருப்பைக் கேள்வி கேட்போருக்கு பகவத் கீதையில் கிருஷ்ணன் தரும் பட்டம் என்ன? நஷ்டாத்துமா (அழிந்து போனவன்), இடம்பமான் (குதர்க்கம் பேசுவோர்), மதனவித்தன் (ஆணவக்காரன்), அசுரன், இராட்சசன். இந்த வசவுகளை புனித நூல் என்று கொண்டாடிக் கொண்டிருப்பவர்கள். பெரியார் கேள்வி கேட்டால் மட்டும் கதறுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; அதை நியாயப்படுத்தி பரப்புகிறவன் அயோக்கியன்; சிந்திக்காமல் ஏற்றுக் கொள்கிறவன் காட்டுமிராண்டி என்ற பெரியார் குரல் ஒன்று மட்டும் பார்ப்பனியத்துக்கு எதிரான சிங்கமாக கர்ஜித்தது.

கிருஷ்ணன் கூறுகிறான். “உலகையே அழிக்கும் வல்லமை என்னிடம் இருக்கிறது; அர்ச்சுனா, நீ உனது கருமத்தை (அதாவது உயிர்க் கொலையை) செய்யாவிட்டாலும் உனக்கு எதிரே நிற்கும் போர் வீரர்கள் உயிர் வாழப் போவது இல்லை; நீ மட்டுமே உயிர் வாழ்வாய் எனவே எழுந்து நில்; எதிரிகளை வென்று ஆட்சி உரிமையை எடுத்துக் கொள். என்னால் ஏற்கனவே கொல்லப்பட்ட துரோணனையும், பீஷ்மனையும், கர்ணனையும் பிற போர் வீரர்களையும் நீ கொன்று விடு” என்று வெளிப்படையாகக் கொலை வெறியைத் தூண்டும் பகவத் கீதையை தடை செய்ய வேண்டாமா? ‘கொலை’களைக் கொண்டாடுகிறவர்கள் பெரியாரின் கடவுள் மறுப்பையும் ஆ. இராசாவின் ‘சூத்திரர்’ எதிர்ப்பையும் புண்படுத்துவதாகக் கூப்பாடு போடுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

# பெரியார் பல்கலைக்கழகத்தின் இந்துத்துவா போக்கு: கொளத்தூர் மணி கண்டனம்

கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:

பெரியார் பல்கலைக்கழகத்தின் தொடர் இந்துத்துவப் போக்கினை இன்னொரு நிகழ்வு வழியாகவும் வெளிக்காட்டி இருப்பதை சுட்டிக்காட்டுவதும், அதற்கான எதிர்வினைகளைப் பற்றி சிந்திக்கக் கோருவதும் தான் இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் சார்பாக 14.9.2022 அன்று ‘பெரியாரை வாசிப்போம்’ என்ற நிகழ்வு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளதாகவும் அதில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கிறார்.

அந்த அறிக்கையில் அன்று அனைவரும் வாசிக்க வேண்டிய செய்திகளையும் கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கை தொடங்குகிற போது திருமூலரின் ஒரு பாடலோடு தொடங்குகிறது. அந்தப் பாடலில் உள்ள பொருளைச் சொல்லி இருந்தாலும் பெரியாரின் தத்துவ பார்வையும், அறிவுக்கான தேடலும், சமூக விடுதலைக்கான அணுகுமுறையும் போர்க்குணம் மிக்க அறிவுத் தேடல் ஆகும் - என்ற செய்திகளுடன் முடிகிறது முதல் பத்தி.

ஏதேனும் ஒரு மேற்கோள் காட்டியாக வேண்டும் என்று விரும்பி இருந்தால் திருக்குறளில் இருந்து, எப்பொருள் எத்தன்மைத்தாயினும் - அல்லது - எப்பொருள் யார்யார் வாய் உரைப்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு போன்ற குறள்களையோ,

வயதில் அறிவில் முதியார் வாய்மை போருக்கு என்றும் இளையார் உயர் எண்ணங்கள் மலரும் சோலை போன்ற பாடல் வரிகளையோ பயன்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் ஏற்கனவே இந்துத்துவ வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருக்கிற பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், அவரைச் சார்ந்த கூட்டத்தினர் மீது திறனாய்வுகள் செய்யப்படும் நிலையில் இவ்வாறான முயற்சியை - எந்த செயல் திட்டமானாலும் அதில் எங்கள் இந்துத்துவ சிந்தனையைத் திணிப்போம் என்ற திமிர்த்தனமான பல்கலைக் கழக துணைவேந்தரின் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வாய்ப்பு இருக்கிற தோழர்கள், மாணவர்கள் அந்த நிகழ்வில் அதற்கான எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும் என்றும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்ந்தும் இம்மாதிரியான இந்துத்துவ ’சில்லுண்டி’ வேலைகளில் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஈடுபடாமல் இருப்பது தான் நல்லது என்பதையும், அதுவே ஒரு கல்வியாளரின் சரியான போக்கு என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியதும், அந்த திசை நோக்கி அவரைத் திருப்புவதற்கு அனைத்து தரப்பினரும் தங்கள் தங்கள் வழிமுறைகளில் இது குறித்து தொடர் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற கடமையையும் இவ்வேளையில் அன்புடன் நினைவூட்டுகிறோம் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## அம்மா உணவகத்துக்கு பெரியார் பெயர்: சுப. வீரபாண்டியன் முதல்வருக்கு கோரிக்கை

பெரியார் உணவகம், சில நாள்களுக்கு முன்பு கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் உள்ள காரமடை என்னும் ஊரில், பெரியார் உணவகம் என்னும் பெயரில் ஓர் உணவகம் திறக்கப்பட்டது. உடனே இந்து முன்னணியைச் சேர்ந்த சிலர் அங்கு வந்து ஈவெரா பெயரில் எல்லாம் கடை திறக்கக் கூடாது. உடனே அதனை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்போது உணவகத்தின் உரிமையாளர் பிரபாகரன் அங்கு இல்லை. ஒரு பணியாளர் மட்டுமே இருந்திருக்கிறார். கடை உரிமையாளர் வந்ததும் சொல்கிறேன் என்று கூறியிருக்கிறார்.

அவர்கள் கேட்கவில்லை. மேலும் 10 பேரை அழைத்துக் கொண்டு வந்து பெயர்ப் பலகையை உடைத்து இருக்கிறார்கள். கடையில் இருந்த பொருள்களை அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அது மட்டுமின்றி, அந்தப் பணியாளரையும் 36 தையல்கள் போடும் அளவுக்கு அடித்துத் தாக்கி இருக்கிறார்கள்.

மிகச் சரியான விடையை அதன் உரிமையாளர் சொல்லி இருக்கிறார். நீங்கள் ஒரு பெயர்ப் பலகையை இடித்தால், அதே பெயரில் இன்னும் பத்து உணவகங்களை நான் உருவாக்குவேன் என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

உடனடியாக அந்த உணவகம் புதுப்பிக்கப்பட்டு, பெரியார் பிறந்த நாளான செப்.17 பகல் 12 மணிக்கு காரமடையில் மீண்டும் திறக்கப்படுகிறது. கோவை ராமகிருஷ்ணன் தலைமையில், திமுகழகத்தின் மாவட்டச் செயலாளர் சி.ஆர். ராமச்சந்திரன் முன்னிலையில் அந்த உணவகத்தையும், பெயர்ப் பலகையையும் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு எங்கும் இருக்கும் அம்மா உணவகங்களை, நம் தன்னிகரற்ற தலைவர், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் பெரியார் உணவகம் என்று மாற்ற வேண்டும் என்றும் சுப. வீரபாண்டியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நன்கொடை

- கழகத் தலைமை அலுவலகத்துக்கு இருக்கைகள் வாங்குவதற்கு பேராசிரியர் சரசுவதி ரூ.15,000/- நன்கொடையாக தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரனிடம் வழங்கினார்.
- சென்னை மயிலாப்பூர் பகுதி கழகம் சார்பில் கழக ஏட்டுக்கு நன்கொடையாக ரூ.2000/-, சென்னை பொதுக் கூட்டத்தில் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கப்பட்டது.
- அயன்புரம் தினகரன்-ஜெயந்தி இணையரின் மகள்கள், பண்பாளன், உசீதன் சார்பில் கழக ஏட்டுக்கு ரூ.5000/- நன்கொடையாக வழங்கப்பட்டது.
- தி.மு.க. தலைமைக் கழகப் பொதுக் குழு உறுப்பினர் சைதை மா. அன்பரசன் கழக ஏட்டுக்கு நன்கொடையாக ரூ.1000/- வழங்கினார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## விடுதலை இராஜேந்திரன் டுவிட்டரிலிருந்து...

1) அனைத்து இந்துக்களையும் கருவறைக்குள் அழைக்கிறது பெரியார் சிலை – இது மனிதம்; அதைத் தடுக்கிறது கடவுள் சிலை – இது ஆகமம்.

அகற்றப்பட வேண்டியது ஆகமமா? மனிதமா?

## அர்ச்சகர் பயிற்சி சங்கத் தலைவர் வா. ரங்கநாதன் கண்ணீர் உரை

# கோயில்களில் இப்போதும் இழிவுக்கு உள்ளாகிறோம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

திருவாசகம் பாட ஓதுவாரை நியமித்திருக்கிறீர்கள், அதேபோல பயிற்சி பெற்றவர்களையும் அர்ச்சகர்களாக நியமிக்கலாம்' என்று பேட்டியை வெளியிட்டார்கள். அப்போது வழக்கில் என்ன கூறினார்கள் என்றால், "கோவில் கருவறைக்குள் அனைத்து ஜாதியினரும் வந்துவிட்டால், கோவில் கர்பக்கிரகம் தீட்டுப் பட்டுவிடும். கோவிலின் புனிதத் தன்மை கெட்டு விடும். கோவில் இடிந்தே விழுந்துவிடும்" என்று, நாங்கள் கூறவில்லை மக்கள் கூறுகிறார்கள் என்று மதுரை ஆதி சிவாச்சாரியார்கள் சங்கம், தென்னிந்திய பிராமணர்கள் சங்கம் போன்ற பிராமணர்கள் சங்கம் உச்சநீதி மன்றத்தில் இடைக்காலத் தடையை வாங்கி விட்டார்கள். எங்களுக்கு பணி வழங்குவதில் தான் தடையே தவிர பயிற்சி வழங்குவதில் தடையை அவர்களால் வழங்க முடியவில்லை. அப்போது தான் "அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள்" என்று ஒரு சங்கம் உருவாக்கி நான் தலைவராக இருந்து உச்சநீதிமன்றத்தில் வழக்கில் இணைந்தோம்.

மூன்று செய்திகளைப் பார்ப்போம். 1) பயிற்சிப் பள்ளியில் படிக்கும் போது எப்படி எங்களுக்கு எதிர்ப்பு வந்தது. 2) இந்து என்று சொல்லிக்கொள்கிற அமைப்புகள் என்ன செய்தார்கள்? 3) இந்தப் பணி ஆணைகள் வழங்கப்பட்ட பிறகு என்னென்ன பிரச்சனைகள் உள்ளன?

பயிற்சி பள்ளியில் படிக்கும் போது ஜாதி இழிவைத் தாங்கிக் கொண்டு தான் படித்தோம். நான் திருவண்ணாமலையில் படித்தேன். அப்போது சாமி தரிசனம் பார்க்கும் போது உள்ளே இருந்த பார்ப்பன அர்ச்சகர்கள் எங்களைப் பார்த்து 'இதோ வந்துட்டான் பாரு தேவடியா பையன், இதோ சூத்திர பையன் வந்துட்டான் பாரு' என்று பச்சையாகவே திட்டுவார்கள். காலால் எட்டி உதைப்பது என்று மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். அப்போதே தோன்றியது இப்படி அவமானங்களைச் சுமந்து சாமி தரிசனம் செய்ய வேண்டுமா ? என்று. அப்போது அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் துறையை நேரடியாக முதல்வர் கலைஞரே வைத்திருந்தார். இப்படியான பிரச்னைகளை அவரிடம் கூறிய பிறகு "யாருக்கும்தொந்தரவு செய்யக் கூடாது" என்று அரசாணையை கலைஞர் பிறப்பித்தார்.

பயிற்சிப் பள்ளியில் படிக்கும் போது பூஜைகளை கற்றுக் கொள்வதற்கு அரசு சிலைகளை ஏற்பாடு செய்தது. ஆனால் பார்ப்பன அர்ச்சகர்கள் எங்களுக்கு சிலைகளைக் கொடுக்க மறுத்துவிட்டனர். பின் பயிற்சி மாணவர்களாகிய நாங்களே சிலையை செய்து பூஜை முறைகளை கற்றுக் கொண்டோம். தொடர்ந்து, அனைத்துப் பாட சாலைகளிலும் சாப்பாடு சரியாக வழங்க விடாமல் செய்வது, ஜாதியைக் கூறி கிண்டல் செய்வது என்று தொடர்ந்து அவமானப்படுத்தினர்.

திருவண்ணாமலையில் ஆகமங்களை கற்றுக் கொடுக்க ஒருவர் வந்தார். அவரை பார்ப்பன அர்ச்சகர்கள் ஆட்களை வைத்து அடித்தார்கள், அவர் அதன் பின் கற்றுக் கொடுக்க வரவில்லை. பின் மாணவர்கள் நாங்களெல்லாம் சென்று அவரை சமாதானப்படுத்தி வரவழைத்தோம். பயிற்சிப் பள்ளிகளிலே ஜாதி ஏற்றத்தாழ்வோடும் அவமானங்களோடும் தான் படித்தோம்.

இங்கே தங்களை இந்து என்று சொல்லிக் கொள்கிற அமைப்புகளான, பாஜக, இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி போன்ற அமைப்புகளுக்கு ஒரே ஒரு கேள்வியை முன் வைக்கிறேன். நாங்கள் உங்களை சந்திக்காமல் இல்லை. சந்தித்து கேட்ட போது எங்களுக்கு நீங்கள் கூறிய பதில் என்ன ? இராம கோபாலன், ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் உள்ள ஆகமம் இல்லாத கோவில்களில் உங்களுக்கு பணி வழங்குகிறோம் என்று கூறினார். நாங்கள் படித்தது ஆகமக் கோவில்களில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் பணியாற்றத்தான் என்று கூறினோம். நீங்கள் அதற்கு மறுத்துவிட்டீர்கள். ஆனால் இன்றும் பெரியாரிஸ்டுகளும் மார்க்சிஸ்டுகளும் தான் எங்களுக்காகப் போராடுகின்றனர்.

உச்சநீதி மன்றத்திலும், உயர் நீதி மன்றத்திலும் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதை எதிர்த்து நிறைய வழக்கு போடப்படுகிறது. யார் இந்த வழக்குகளைப் போடுவது ? பணி ஆணை கடந்த வருடம் ஆகஸ்டு 14 இல் வழங்கப்பட்டது. இந்த பணி ஆணை வழங்குவதற்கு முன், விளம்பரம் வருகிறது. அந்த விளம்பரத்தை எதிர்த்து 5 பேர் வழக்கு தொடுக்கிறார்கள். அதன் பின், கோவில் வழி பாட்டாளர் சங்கம் ரங்கராஜ நரசிம்மன், பார்ப்பன அர்ச்சகர்கள் ஆதி சிவாச்சாரியார்கள் சங்கம், ஆர்.எஸ்.எஸ். ஸைச் சேர்ந்த நபர்கள் இப்படி 27-க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டன. இந்த வழக்குகளில் "அனைத்து ஜாதி அர்ச்சகர் மாணவர் சங்கம்" சார்பில் வாதாடுவதற்கு அனுமதி கேட்டு மனு போட்டோம். ஆனால், அதை நீதிபதி தள்ளுபடி செய்து விட்டார். அந்த நீதிபதி தற்போது பணி ஓய்வு பெற்று சென்று விட்டார். பாஜவைச் சேர்ந்த முக்கியமான ஒரு நபர் டெல்லியிலிருந்து அழைக்கிறார்.




"இந்த வழக்குக்காக நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். முடித்துக் கொள்ளலாம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள்" என்கிறார். நான் கூறினேன், "நாங்கள் அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறுகிறோம். எங்களுக்கு திருவண்ணாமலை கோவிலிலோ, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலோ, பார்த்தசாரதி கோவிலிலோ எங்களில் ஒரு 10 மாணவர்களை முதல்வர் பணி ஆணை வழங்கிய பின் இந்தக் கோவில்களின் கருவறையில் பூஜை செய்ய வைக்க முடியுமா ? என்று கேட்டேன். பதில் இல்லை."

- **பயிற்சிக் காலத்தில் பயிற்சி அளிக்க வந்த ஆசிரியரை பார்ப்பனர்கள் தாக்கினர்.**
- **பணி நியமனமாகி ஓராண்டுக்குப் பிறகும் பல கோயில்களில் பூஜை செய்ய பார்ப்பனர்கள் அனுமதிப்பது இல்லை.**
- **அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குறைக்கப்பட்ட வயது வரம்பை 45ஆக உயர்த்தி ஆணையிட்டார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.**
- **ஆகமக் கோயில் ஒன்றில் 2000 ஆண்டு வரலாற்றில் பார்பபனரல்லாத அர்ச்சகர் ஒருவர் முதன்முதலாகக் கொடிக் கம்பத்தில் கொடி ஏற்றியுள்ளார்.**

இன்று திருச்சி நாகநாதர்சுவாமி கோவிலில் எங்களுடன் பயிற்சி செய்த நண்பர் வேல்முருகன், ஆகமக் கோவிலில் கொடி ஏற்றியிருக்கிறார். 2000 ஆண்டு தீண்டாமையை அகற்றியிருக்கிறார். (பலத்த கைதட்டல்) இது கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. இது பொதுமக்களின் கோவில். இதில் ஏன் அனைத்து ஜாதியினரும் பூஜை செய்ய வைக்க முடியவில்லை. எதற்கு இத்தனை வழக்குகள், 1972, 2015, 2022 இப்படி அத்தனை வழக்குகளிலும் ஆகமம், பழக்க, வழக்கம் இதைத் தான் குறிப்பிடுகிறார்கள். ஆகமம் என்றால், கோவில் கட்டுமான முறை, பூஜை முறை இவைகள் தான் ஆகமம். இதில் எங்காவது ஜாதி குறிப்பிடப்பட்டிருக்கிறதா ? பிறகு ஏன் நான் பூஜை செய்யக் கூடாது ? இன்று சட்டம் என்பது ஆதாரப்பூர்வமாக ஆவணமாக நம்மிடம் உள்ளது. ஆனால், மனு தர்மத்திற்கு ஏதாவது ஆவண ஆதாரம் உண்டா? எங்காவது ஒரு கல்வெட்டு இருக்கிறதா?

மாவட்ட ஆட்சியர், ஏன் குடியரசுத் தலைவராகக் கூட ஒரு தாழ்த்தப்பட்டவர் ஆகலாம். ஆனால் அதே குடியரசுத் தலைவராக இருப்பவர் அர்ச்சகர் பயிற்சி பெற்று மீனாட்சி அம்மன் கோவிலில் அர்ச்சகர் ஆக முடியுமா ? இந்திய ஒன்றியத்தின் மிக உயரிய அதிகாரியாகக் கூட ஆகலாம் ஆனால் அர்ச்சகர் ஆக முடியாது. இதற்குக் காரணம் பார்ப்பனராக பிறக்காததும், மனு தர்மமும் தான் காரணம். இதை நாம் தகர்க்க வேண்டும். ஆகமம் என்பது வெறும் கோவில் கட்டுமானம், பூஜை முறைகள் தான் என்று பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இப்படி அர்ச்சகர் பணி நியமன ஆணை வாங்கி, பணியில் பார்ப்பனர்களின் கொடுமையை தாங்க முடியாமல் தூக்கு மாட்டி இறக்கும் முடிவுக்கு 5 மாணவர்கள் போய் விட்டார்கள்.

யாருக்காவது தெரியுமா? மக்களுக்குத் தெரியுமா ? ஊடகங்களுக்குத் தெரியுமா? ஒவ்வொரு நாளும் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையை விட்டுப் போய்விடலாமா, அல்லது இறந்து விடலாமா என்ற நிலையில் தான் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன ? இது கோபம் அல்ல எங்களின் உணர்வு. இரவு, பகலா இந்த பிரச்னையை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். திருச்சி நாகநாதர் சுவாமி கோவிலில் தினமும் கொலை மிரட்டல் விடுக்கிறார்கள்.

வயலூர் முருகன் கோவில் இன்று வரை கருவறையில் பூஜை செய்ய முடியவில்லை. அரசின் பணி ஆணை இருக்கிறது. ஆனால், ஏன் பூஜை செய்ய விடவில்லை ?

அங்கே இருக்கிற பார்ப்பன அர்ச்சகர், "மோடி இருக்கிறார், அமித்ஷா இருக்கிறார்" என்று மிரட்டி காணொளியே பதிவிட்டிருக்கிறார்.

தமிழன் என்ற உரிமையை ஏன் நிலைநாட்ட முடியவில்லை ? தமிழர்களின் கோவில்கள் தானே? தேனி உத்தமபாளையம் கோவிலிலும் பூஜை செய்ய விடவில்லை. அண்ணன் கொளத்தூர் மணியிடம் கூறினேன்.

"பாஜக, ஆர்.எஸ்.எஸ்.யை சார்ந்தவர்கள் 10 பேர் வந்து அர்ச்சகரை பூஜை செய்யக் கூடாது என்று மிரட்டுகிறார்கள்' என்று கூறினேன். அதன் பின் முதல்வர் பிரிவிலிருந்து தேனி ஆட்சியரிடம் கேட்கப்பட்டது. பிறகு தேனி ஆட்சியர் அழைத்து, அந்த கோவிலில் மாணவர் பூஜை செய்ய விடவில்லையென்றால் அரசு யாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார்" என்று கூறியவுடன் அந்த மாணவரை பூஜை செய்ய அனுமதித்தனர். (கைதட்டல்)

24 அர்ச்சகர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. இவர்களில் யாருமே முதல் 6 மாதத்திற்கு கருவறையில் நுழைந்து பூஜை செய்யவில்லை. பணி ஆணை வழங்கப்பட்ட மறுநாள் மட்டும் தான் ஒரே ஒரு நாள் பூஜை செய்ய விட்டார்களே தவிர தொடர்ந்து விடவில்லை. அதன் பிறகு முதல்வரின் நேரடி கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன் பூஜை செய்ய அனுமதிக்கப்பட்டார்கள்.

2020ஆம் ஆண்டு அதிமுக அரசு பயிற்சி பெற்ற மாணவர்களின் பணி நியமன வயதைக் குறைத்து விட்டார்கள். திமுக அரசு முன்பு இருந்த போது 18 லிருந்து 45 வயது வரை இருந்தது. இந்த வயது வரம்பை இப்படி பிரச்சனைகள் வந்தவுடன் அதிமுக 35 ஆக குறைத்துவிட்டது. இதனால் பல ஆண்டுகாலம் பயிற்சிக்குப் பிறகு தடை ஆணைகளால் பணி நியமனம் பெற முடியவில்லை.

அந்த வயது வரம்பை தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செப்டம்பர் 2 ஆம் தேதி 45 ஆக உயர்த்தி உத்தரவிட்டிருக்கிறார் என்பதை பெரியார் பிறந்த நாளன்று கூறி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்) மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி போன்ற ஆகமக் கோவில்களில் இட ஒதுக்கீடு அடிப்படையில் எங்களை பணி நியமனம் செய்ய வேண்டும் என்று முதல்வருக்கு இந்த நாளில் வேண்டுகோளாக வைக்கிறோம். ●

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ● 170 கி.மீ மேல் பயணம் ● 45 க்கு மேற்பட்ட இடங்களில் கொடியேற்று விழா ● பெண் தோழர்கள் திரளாக பங்கேற்பு

# மேட்டூர் பகுதியைக் குலுக்கிய வாகனப் பேரணி

*தந்தை பெரியார் 144ஆவது பிறந்த நாள் விழா சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 17.09.2022 சனி காலை 10.00 மணிக்கு சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி. கோவிந்தராஜ் தலைமையில் தொடங்கியது.*

மேட்டூர் அருகே உள்ள கோனூர் சமத்துவபுரம் பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் உருவச் சிலைக்கு பெண் தோழர்கள் மாலை அணிவிக்க கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதனைத் தொடர்ந்து தேன்மொழி உறுதிமொழி கூற அனைத்து தோழர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மாலை அணிவிப்பு நிகழ்வில் திராவிட முன்னேற்ற கழக நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் அர்த்தனாரீஸ்வன் (எ) சின்னு, பி.என்.பட்டி பேரூராட்சி முன்னாள் சேர்மேன் பொன்னுசாமி மற்றும் தி.மு.க.வைச் சார்ந்த தோழர்களும் கலந்து கொண்டனர்.

மாலை அணிவிக்கும் நிகழ்வில் சுசீந்திரன் - கிளாரா மேரியின் பெண் குழந்தைக்கு ஆதினி என்ற பெயர் சூட்டும் நிகழ்வும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பேரணி மல்லிகுந்தம் பகுதிக்கு புறப்பட்டது. மல்லிகுந்தம் பகுதியில் உள்ள கழகக் கொடியினை சந்திரா சம்புசாமி, பேருந்து நிலையத்தில் அன்பழகன் கழகக் கொடியினை ஏற்றி சிறப்பித்தனர். தோழர்களுக்கு கேக் மற்றும் தேநீர் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கழகக் கொடியேற்றிய இடங்களும் ஏற்றிய தோழர்களும் மேச்சேரி பகுதி சூரி, பனங்காடு பகுதியில் நங்கவள்ளி அறிவழகன், வனவாசி சந்தை பேட்டை பகுதியில் கதிர்வேல், நங்கவள்ளி பேருந்து நிலையம் - ஐஸ்வர்யா, வீரக்கல் - இந்திரா, RC பிளாண்ட் - சந்திர மூர்த்தி, ஆர்.எஸ். பகுதி - முரளிதரன், NSK நகர் - பிரபாகரன், தேங்கல் வாரை - பிரசாந்த், RS படிப்பகம் - விவேக், தங்கமாபுரிபட்டினம் - சுகந்தன், சேலம் கேம்ப் - சந்தோஸ் குமார், காவேரி கிராஸ் -சுந்தரம், மாதையன் குட்டை - மேட்டூர் நகர தலைவர் மார்ட்டின், புதுக் காலணி அம்ஜத்கான், தூக்கணாம்பட்டி - திவாகர், காவேரி நகர் - கிட்டு, மசூதி தெரு - சுதா, நேரு நகர் - இராமச்சந்திரன், மேட்டூர் பேருந்து நிலையம் - மார்ட்டின், மேட்டூர் நகர படிப்பகம் - நகர பொருளாளர் முத்துக்குமார், VPK நகர் - பொன்னகர் சக்தி, பாரதி நகர் - கோகுல், பொன்னகர் - காயத்ரி, குமரன் நகர் - மாவட்ட மாணவரணி பொறுப்பாளர் திவாகர், மணி மெடிக்கல் - அண்ணாதுரை, ஓர்க் ஷாப் கார்னர்-காவை ஈஸ்வரன், கொளத்தூர் படிப்பகம் - குமார், தார்க்காடு - தர்மலிங்கம், கத்திரிப்பட்டி - பழனியப்பன், மூலக் கடை - மூங்கத்தூர் இராஜேந்திரன், காந்திநகர் - செண்பகம், செட்டியூர் - மாரி அண்ணன், செ.செ.காட்டுவளவு - அபிமன்யு, காவலாண்டியூர் - விஜி, கொளத்தூர் நகரத்தில் திருவள்ளுவர் நகர் கோவிந்தராஜ், காவல் நிலையம் அருகில் வால்குறிச்சி குமார், கொளத்தூர் பேருந்து நிலையம் கு. சூரியகுமார் நீதிபுரம் வெங்கடேஷ், உக்கம்பருத்திக்காடு மோகன் ஆகியோர் கொடியேற்றினர்.

கோவிந்தப்பாடியில் தோழர் சென்னியப்பன் பெரியார் பதாகை வைத்து அதற்கு மாலை அணிவித்தார். பின்னர் தோழர்களுக்கு தேனீர் வழங்கினார்.

கண்ணாமூச்சி பகுதியில் தந்தை பெரியாரின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் கேக் வெட்டப்பட்டு இனிப்புகளும், குளிர்பானங்களும் வழங்கப்பட்டது. மதிய உணவு நங்கவள்ளி பகுதி தோழர்களால் மாட்டுக்கறி பிரியாணி ஏற்பாடு செய்யப்பட்டு அனைத்து தோழர்களுக்கும் வழங்கப்பட்டது.

இரவு 8.00 மணிக்கு கொடியேற்று விழா மற்றும் இரு சக்கர வாகனப் பேரணி காவலாண்டியூர் படிப்பகத்தில் நிறைவடைந்தது. இரவு உணவு காவலாண்டியூர் பகுதியில் அசைவ உணவாக ஏற்பாடு செய்யப்பட்டது.

காவலாண்டியூரில் தோழர்கள் சாப்பிட ஊர் மாரியம்மன் கோயில் கமிட்டியார் கோவில் அன்னதானத்திற்கு வைத்திருந்த பாக்குமட்டை தட்டு 150ஐ உடனடியாக கொடுத்து சாப்பிட உதவினர்.

தந்தை பெரியாரின் 144ஆவது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் மேட்டூர் RS, மேட்டூர் நகரம், கொளத்தூர், காவலாண்டியூர், உக்கம்பருத்திக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள படிப்பகங்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

மேட்டூர் RS, மேட்டூர் நகர பகுதிகளில் சுவரெழுத்துப் பணிகளை குமரப்பா உடன் இணைந்து முத்துராஜ், RS நாகராஜ், சிறுத்தை பாலா மற்றும் ஓவியர் செந்தில் ஆகியோரால் சிறப்பாக செய்யப்பட்டு இருந்தது. சேலம் மேற்கு மாவட்டம் முழுவதும் 600 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, 2000 துண்டறிக்கைகள் பொது மக்களிடையே விநியோகிக்கப்பட்டது. தோழர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் தந்தை பெரியாரின் 144ஆவது பிறந்தநாள் விழா சேலம் மேற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக நடந்து முடிந்தது.

## கோட்டை மைதானம் பெரியார் கோட்டையானது

சேலம் மாநகர் முழுவதுமே, பறை இசை, முழக்கங்கள் என கோட்டை மைதானமே பெரியாரின் கோட்டையாக மாறியது. நிகழ்விற்கு வந்த தோழர்களின் வாகனத்தில் பெரியார் 144 (Sticker) ஒட்டப்பட்டது. பறை இசையுடன் நடைப் பேரணியை மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் துவக்கி வைத்தார். பெரியாரின் முகமூடி அணிந்து பேரணி கோட்டை மைதானத்தில் இருந்து அரசு மருத்துவமனை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழியாக பெரியார் சிலையை வந்தடைந்தது. பேரணியில் 100க்கும் மேற்பட்ட தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

பெரியார் சிலை அருகே கூடியிருந்த மற்ற இயக்கத்தினர் மற்றும் அரசியல் கட்சியினருக்கு சனாதன எதிர்ப்பு துண்டறிக்கை கொடுக்கப்பட்டது. மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப் பட்டது. பெரியார் சிலையின் அருகே அமைக்கப்பட்ட புதிய கொடிக்கம்பத்தில் மாவட்டச் செயலாளர் டேவிட் கொடியேற்றினார். சிலை அருகே அமைக்கப்பட்ட பெரியார் கருத்தியல் பலகையை மாவட்ட துணைத் தலைவர் ஏற்காடு பெருமாள் திறந்து வைத்தார். 17.09.2022 அன்று தொடங்கப்பட்ட நமது கழகத்தின் இணையதள வானொலியின் பெயர் மற்றும் சின்னத்தை நமது கழகத் தலைவரிடம் வாட்ஸ்அப் வழியாக பெற்ற வாழ்த்துரையுடன் முன்னாள் பதிவாளர் இளங்கோ வெளியிட்டார்.

மாநில அளவிலான பளுதூக்கும் போட்டியில் முதலிடம் வென்ற முத்துக்குமாரிக்கு தீபா மற்றும் ஆனந்தி இணைந்து பெரியார் புத்தகங்களை வழங்கி ஊக்கப்படுத்தினார். காலை 8 மணிக்கு தொடங்கி 11 மணி வரை காலை நிகழ்வுகள் நடைபெற்றது. பெரியார் சிலையிலிருந்து சேலம் மாநகரம் ஏற்காடு இளம்பிள்ளை மற்றும் சிந்தாமணியூர் தோழர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட வாகனப் பேரணியை மாநகர அமைப்பாளர் பாலு கொடியசைத்து தொடங்கி வைத்தார். வாகன பேரணி நகரின் முக்கிய பகுதியில் பயணித்து பொது மக்களிடம் துண்டறிக்கை வழங்கி பெரியாரின் கருத்துகளை கொண்டு சேர்க்கப்பட்டது.

வாகனப் பேரணியை தொடர்ந்து பிரபாத் பகுதியில் அலங்கரிக்கப்பட்ட பெரியாரின் திருவுருவப் படத்திற்கு குமார் மாலை அணிவித்தார். எப்போதுமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் திருச்சி மற்றும் கோவை பிரிவு சாலையில் பெரியார் பிறந்தநாள் உறுதிமொழியை ஆனந்தி வாசிக்க தோழர்கள் அனைவரும் உறுதி எடுத்துக் கொண்டோம். வெங்கட் அருணாச்சலம் மெயின் ரோட்டில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தார். விழாவில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

தாதகாப்பட்டி உழவர் சந்தை அருகே அமைக்கப்பட்ட பெண் உரிமை எனும் பெரியாரின் கருத்தியல் பலகையை வெற்றிமுருகன் திறந்து வைத்தார். செல்வமணி பில்லு கடை பேருந்து நிறுத்தம் அருகே அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தார். ராஜசேகர் கருங்கல்பட்டி மார்க்கெட் பகுதியில் அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தார். மூனாங்கரடு பகுதியில் புதிதாக அமைக்கப் பட்ட கொடிக்கம்பத்தில் மாநகர தலைவர் சரவணன் கொடியேற்றினார். மெய்யழகன் மூனாங்கரடு பகுதியில் அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்தார்.

சரவணன் மூனாங்கரடு பகுதி-2இல் அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டோம்.

அம்பிகாபதி, சிவசக்தி நகர் பகுதியில் அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டு தோழர்களுக்கு தேனீர் விருந்து அளித்தார். கதிரேசன் உத்திரப்பன் நகர் பகுதியில் அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்தார். ஆசைத்தம்பி அன்னதானபட்டியில் உள்ள அம்பேத்கர் மண்டபத்தில் அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்தார். தேவராஜ் நெத்திமேடு பகுதியில் அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்தார்.

செந்தில்குமார் தமிழ் ஈழ மக்களுக்காக தன்னுயிர் தந்த தியாகச் சுடர் விஜயராசு படத்தை திறந்து வீரவணக்கம் செலுத்தினார்.

ஒருதலைபட்சமாக செயல்பட்ட காவல்துறையின் எதிர்ப்பை மீறி ஜங்ஷன் தபால் நிலையம் அருகே புதிதாக அமைக்கப்பட்ட நமது கழகத்தின் கொடிக்கம்பத்தில் மாநகர அமைப்பாளர் பாலு கொடியேற்றினார். காவல்துறையின் எதிர்ப்பை சரியாக கையாண்டு தோழர்கள் அனைவரும் ஜங்சன் பகுதியில் அமைக்கப்பட்ட அய்யாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து விண்ணதிர முழக்கமிட்டோம்.

காவல்துறையின் மிரட்டலுக்கு அஞ்சாமல் நகரத்தின் நிகழ்வுகளை முடித்து அதே வேகத்தில் வாகனப் பேரணியாக சிந்தாமணியூர் நோக்கி பயணித்தோம்.

**சிந்தாமணியூர் :** சிந்தாமணியூர் பகுதியில் பகுதி செயலாளர் முருகேசன் நமது கழக கொடி ஏற்றினார். பாரப்பட்டி பகுதியில் பகுதி பொருளாளர் பிரகாஷ் கொடியேற்றி சிறப்பித்தார். அதைத் தொடர்ந்து பெரியசாமி ஐயாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டோம். பகுதி தலைவர் ரவி அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார்.

**தாரமங்கலம் :** குடந்தை பாலன் தாரமங்கலம் பேருந்து நிலையம் மற்றும் அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டோம். அதிக வெயிலின் தாக்கத்திலிருந்து தோழர்களை காக்க தனசேகரன் இல்லத்தில் அனைவருக்கும் எலுமிச்சை சாறு வழங்கினார்.

**பவளத்தானூர் :** தோழர்களுக்கு மதிய உணவாக மாட்டுக்கறி பிரியாணி வழங்கப் பட்டது. இன்னும் அதிக வேகத்துடன் வாகன பேரணி தொடங்கி பவளத்தானூரில் சரவணன் அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டோம்.

**கே.ஆர். தோப்பூர் :** திமுகவைச் சார்ந்த தோழர்கள் பேரணியை வரவேற்றது மட்டுமின்றி இனிப்பும் வழங்கினர். அதைத் தொடர்ந்து கண்ணன் அய்யாவின் படத்திற்கு மாலை அணிவித்து முழக்கமிட்டோம். வாகனப் பேரணி தொடர்ந்து இளம்பிள்ளை சென்றடைந்தோம்.

**இளம்பிள்ளை :** இளம்பிள்ளை - தங்கதுரை, கறிக்கடை பேருந்து நிறுத்தம் - மணிகண்டன், கோனேரிப்பட்டி - தனசேகர், முருங்கபட்டி - குப்புசாமி, பெத்தாம்பட்டி - பார்த்திபன், நல்லகவுண்டனூர் - கணபதி ஆகியோர் கழக கொடி ஏற்றி சிறப்பித்தனர். கிட்டத்தட்ட 7 மணி நேரம் நடந்த வாகனப் பேரணி இறுதியாக முடிந்தது. வாகனப் பேரணி முடியும் போது 2000 துண்டறிக்கையும் மக்களிடம் சென்றடைந்தது.

பயணித்து களைத்துப் போன தோழர்களுக்கு கோகுல கண்ணன் இல்லத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. நன்றியுரை தங்கதுரை வழங்க பெரியார் பிறந்த நாள் நிகழ்வுகள் நிறைவுற்றது. அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்ட அய்யாவின் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது.

**ஆத்தூர் :** உழவர் சந்தை எதிரே உள்ள பெரியார் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து முழக்கமிட்டோம் அதைத் தொடர்ந்து அருகே இருக்கும் கழக கொடிக் கம்பத்தில் கொடி ஏற்றி பெரியார் பிறந்தநாள் உறுதிமொழியை ஏற்றோம். நிகழ்வில் கலந்து கொண்ட தோழர்கள் மாணவர்களென இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தோம். மாவட்டம் முழுவதும் 500 சுவரொட்டிகள் சுவர் சித்திரங்களாக மாற்றப்பட்டான.

நம்முடைய நிகழ்வுகள் அனைத்தும் வீடியோ பதிவாக Just Now Salem முகநூல் பக்கத்தில் 2200 பார்வையாளர்கள் மற்றும் இண்ஸ்டாகிரமில் 5000 பார்வையாளர்களை கடந்து மக்களை சென்றடைந்தது வருகிறது. தோழர்கள் குடும்பம் குடும்பமாக கலந்து கொண்டனர்.

**அடுத்த இதழில்...**

*மேலும் பல ஊர்களில் கழகம் எடுத்த பெரியார் பிறந்த நாள் விழா செய்திகள் – அடுத்த இதழில் இடம் பெறும். (ஆர்)*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.250
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd September 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN